


04.01.2025

## தலைப்புச் செய்திகள்

1.வளர்ச்சியின் மையமாக ஊரக பகுதிகளை மேம்படுத்துவதே மத்திய அரசின் நோக்கம் என பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. மத்திய அரசின் மக்கள் நலத்திட்டங்களால் கிராமப் புறங்களில் வறுமை குறைந்துள்ளதாக பாரத ஸ்டேட் வங்கியின் ஆய்வறிக்கை தெரிவிக்கின்றது.

3. சாத்தூர் அருகே பொம்மையாபுரம் கிராமத்தில் தனியார் பட்டாசு ஆலையில் இன்று நேரிட்ட வெடிவிபத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் நிவாரணத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது.

4. புதுக்கோட்டை மாவட்டம் தச்சங்குறிச்சியில் நடப்பாண்டின் முதல்ஜல்லிக்கட்டு போட்டி இன்று விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

5. சிட்னியில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான 5-வது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆட்ட நேர இறுதியில் இந்தியா தனது 2-வது இன்னிங்ஸில் 6 விக்கெட் இழப்பிற்கு 141 ரன் எடுத்திருந்தது.

## இனி விரிவான செய்திகள்

□□□□□□□

பிரதமர்

வளர்ச்சி மற்றும் வாய்ப்புகளின் ஆற்றல் மையமாக ஊரக பகுதிகளை மேம்படுத்துவதே மத்திய அரசின் நோக்கம் என பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லி பாரத் மண்டபத்தில், கிராமின் பாரத் மஹோத்சவ் 2025-ஐ இன்று துவக்கி வைத்து பேசிய அவர், இந்த திட்டம் இந்தியாவின் வளர்ச்சிப் பாதையை முன்னெடுத்துச் சென்று நம்நாட்டிற்கு தனி அடையாளத்தை வழங்கும் என்றார்.

கடந்த 10 ஆண்டுகளில் கிராமப்புறங்களின் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு ஊரக மக்கள் மதிப்புடன் வாழ வகை செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

.. வாய்ஸ் ..

இதற்கென அனைத்து கிராமங்களிலும் அடிப்படை வசதி உத்தரவாதத்திற்கான சிறப்பு இயக்கத்தை மத்திய அரசு தொடங்கியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஊரக மக்கள் சுயசார்புடன் வாழும் வகையில் பிரதமரின் கிசான் சம்மான் நிதி திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு இதுவரை 3 லட்சம் கோடி ரூபாய் வழங்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டார்.

தூய்மை பாரதம், வீட்டுவசதி, நீர் மேலாண்மை திட்டங்கள் போன்ற அனைத்தும் கிராம மக்களின் மேம்பாட்டை இலக்காக கொண்டே செயல்படுத்தப் படுவதாக எடுத்துரைத்தார்.

ஆயுஷ்மான் சுகாதார மையங்கள் மூலம் ஒன்றரை லட்சத்திற்கும் அதிகமானோர் பயனடைந்திருப்பதாக பிரதமர் குறிப்பிட்டார்

இந்நிகழ்வின் ஒருபகுதியாக பிரதமர் கைவினை கலைஞர்களுடன் கலந்துரையாடியதோடு அவர்களின் உற்பத்தி திறனை பறைசாற்றும் சிறப்பு கண்காட்சியையும் பார்வையிட்டார்.

மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், நிதித்துறை இணையமைச்சர் திரு.பங்கஜ்சௌத்ரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

□□□□□□□

**அஷ்வினி வைஷ்ணவ்**

மின்னனு தனிநபர், தரவு, பாதுகாப்பு விதிகள் 2025-ஐ மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.அஷ்வினி வைஷ்ணவ் இன்று வெளியிட்டார்.

கடந்த 2023-ம் ஆண்டு குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இச்சட்டத்திற்கு ஒப்புதல் வழங்கிய நிலையில் சமூக ஊடக கணக்குகளை குழந்தைகள் தொடங்க அங்கீகரிக்கப்பட்ட பெற்றோர் அனுமதி இதன்மூலம் கட்டாயமாக்கப்படுகிறது.

□□□□□□□

**பாரத ஸ்டேட் வங்கி**

நாட்டின் கிராமப்புற பகுதி வறுமைநிலை 2023-24-ஆம் நிதியாண்டில் 4.86 சதவிகிதமாக குறைந்துள்ளது என்று பாரத ஸ்டேட் வங்கியின் ஆய்வு தெரிவிக்கின்றது.

2011-12ம் ஆண்டுகளில் இது 25.7 சதவிகிதமாக காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புற ஏழ்மை நிலை 4.09 சதவிகிதமாக இறங்கி உள்ளதாகவும், இவ்வங்கி கூறுகின்றது

நுகர்வு வளர்ச்சி சதவிகிதம் அதிகரித்ததாலேயே ஊரக வறுமை விகிதம் குறைந்ததாக சுட்டிக்காட்டிய பாரத ஸ்டேட் வங்கி இதற்கான அரசின் ஆதரவையும் எடுத்துரைத்துள்ளது.

அரசு வழங்கும் ஆதரவு மிக முக்கியமானதாக இருப்பதாகவும், இதன்மூலம் உணவு பண்டங்களில் விலைகளில் மாற்றங்களுடன் உணவு செலவினம் மட்டுமில்லாமல் பிற செலவினங்களும் மேம்பட்டிருப்பதாக இவ்வங்கி தெரிவித்துள்ளது.

2021-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையிலான ஆய்வறிக்கை வெளியிடப்படும் போது நகர்ப்புற ஊரக வறுமை சதவிகிதம் மேலும் குறைந்திருக்கும் என்றும் இவ்வங்கி கூறியுள்ளது.

நேரடி பணப்பரிமாற்றம், ஊரக கட்டமைப்பு மேம்பாடு, விவசாயிகளின் வருவாய் அதிகரிப்பு ஊரக மக்களின் வாழ்வாதார மேம்பாடு போன்றவையே வறுமை நிலை குறைவிற்கு காரணம் என்றும் பாரத ஸ்டேட் வங்கியின் ஆய்வறிக்கை தெரிவிக்கின்றது.

□□□□□□□

பிரெய்லி

சர்வதேச பிரெய்லி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

பார்வை குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கான பிரத்யேக எழுத்துமுறையை அறிமுகப்படுத்திய லூயிஸ்

பிரெய்லியின் 216-வது பிறந்தநாளை ஒட்டி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இந்தியாவில் பார்வை குறைபாடுடையோரின் கல்வி, வேலைவாய்ப்பு, நலவாழ்வை உறுதிசெய்து இவர்களுக்கு அதிகாரம் அளிக்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதனொரு பகுதியாக பார்வைகுறைபாடு உடையோருக்கான தேசிய கல்வி நிறுவனம் பல்வேறு மாநிலங்களில் மாதிரி பள்ளிகள், பிரெய்லி மேம்பாட்டுக்குழுவுடன் கூடிய தேசிய அளவிலான நூலகம் இதில் அடங்கும்.

□□□□□□□

**வீரேந்திரகுமார்**

மதுரை மாவட்டம் புதுப்பட்டியில் மாற்றுத் திறனாளிகளின் திறன்வளர்ச்சி மறுவாழ்வு மற்றும் மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த மையத்திற்கு மத்திய சமூகநீதி அதிகாரமளித்தல் துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திரகுமார் இன்று அடிக்கல் நாட்டினார்.

36 கோடியே 41 லட்சம் ரூபாய் மதிப்பில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன், மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையம் உள்ளிட்டவை அமையவுள்ளன.

தமிழகத்தின் தென்பகுதியில் உள்ள மாற்றுத்திறனாளிகள் இதன்மூலம் பெரிதும் பயனடைவர்.

□□□□□□□

**பட்டாசு ஆலை விபத்து**

விருதுநகர் மாவட்டம் பொம்மையாபுரம் கிராமத்தில் தனியார் பட்டாசு ஆலையில் இன்று நேரிட்ட வெடிவிபத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.

இவ்விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 4 லட்சம் ரூபாய் வழங்க முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இவ்விபத்தில் காயமடைந்த ஒருவருக்கு ஒருலட்ச ரூபாய் நிவாரணம் வழங்கவும், சிறப்பு சிகிச்சை அளிக்கவும் ஆணையிட்டுள்ளார்.

பட்டாசு தயாரிப்பதற்கான மருந்து கலவை தயாரிக்கும் போது உராய்வு ஏற்பட்டு இவ்விபத்து நேரிட்டதாக முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவ்விபத்து தொடர்பாக பட்டாசுஆலை உரிமையாளர் உள்ளிட்ட 4 பேர் மீது வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

□□□□□□□

## தமிழக சட்டப்பேரவை

**தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் நாளைமறுநாள்** தொடங்குகிறது.

2025-ம் ஆண்டிற்கான முதல் கூட்டத்தொடர் என்பதால் ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி பேரவையில் அன்று உரையாற்றுகிறார்.

தொடர்ந்து ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் 3 நாட்கள் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து கூட்டத்தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து பேரவை அலுவல் ஆய்வுக்குழு முடிவு செய்யும்.

□□□□□□□

**ராஜேந்திரன்**

**தமிழகத்தில்** பேரறிஞர் அண்ணா மிதிவண்டி மற்றும் மாரத்தான் போட்டிகள் இன்றும், நாளையும் நடைபெறுகின்றன.

சேலத்தில் மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேந்திரனும்,

தஞ்சையில் உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோ.வி. செழியனும்,

ராணிப்பேட்டையில் மாநில கைத்தறி துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர்.காந்தி,

திருவள்ளூரில் மாநில சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. நாசர் இப்போட்டிகளை தொடங்கிவைத்தனர்.

**நாமக்கல், கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், தேனி உள்ளிட்ட மாவட்டங்களில்** அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் இப்போட்டிகளை தொடங்கி வைத்தனர்.

3 பிரிவுகளில் 15 கிலோ மீட்டர் தூரம் நடைபெறும் இப்போட்டியில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்கின்றனர்.

□□□□□□□

**கே.என்.நேரு**

தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்புக்குழுவின் பொன்விழா நிகழ்ச்சி திருச்சியில் இன்று நடைபெற்றது.

மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. சக்கரபாணி உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

□□□□□□□

ஜல்லிக்கட்டு

இந்த ஆண்டிற்கான முதல் ஜல்லிக்கட்டு போட்டி புதுக்கோட்டை மாவட்டம் தச்சங்குறிச்சியில் இன்று விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

வாடிவாசல் வழியாக சீறிப்பாயும் 600-க்கும் மேற்பட்ட காளைகளை அடக்க, 300 மாடுபிடி வீரர்கள் களத்தில் உள்ளனர்.

பாதுகாப்பு பணியில் 500-க்கும் மேற்பட்ட காவலர்கள் ஈடுபட்டுள்ளனர்.

வருவாய், கால்நடை மருத்துவக்குழுவினரின் பரிசோதனைக்கு பின் காளைகள் போட்டிக்கு அனுமதிக்கப்படுகின்றன.

காணும் பொங்கலை முன்னிட்டு மயிலாடுதுறை மாவட்டம் திருக்கடையூரில் நடைபெறும் ரேக்ளா பந்தயத்திற்கான முன்னேற்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

□□□□□□□

கும்கி யானை

திண்டுக்கல் மாவட்டம் கன்னிவாடி வனச்சரகத்திற்கு உட்பட்ட விவசாய நிலங்களை சேதப்படுத்திவரும் காட்டு யானைகளை விரட்ட ஆனைமலை மற்றும் முதுமலை புலிகள் காப்பகத்திலிருந்து 2 கும்கி யானைகள் நீலமலை கோட்டைக்கு வரவழைக்கப் பட்டுள்ளன.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

□□□□□□□□

**கோவில்**

சிதம்பரம் அருள்மிகு நடராஜர், நெல்லை அருள்மிகு நெல்லையப்பர் ஆகிய திருக்கோவில்களில் மார்கழி மாத ஆருத்ரா தரிசன விழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

வேத மந்திரங்கள் முழங்க நடைபெற்ற இந்த கொடியேற்ற நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

□□□□□□□□

**கிரிக்கெட்**

சிட்னியில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான பார்டர் கவாஸ்கர் கோப்பை 5-வது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று ஆட்ட நேர முடிவில் இந்தியா தனது 2-வது இன்னிங்ஸில் 6 விக்கெட் இழப்பிற்கு 141 ரன் எடுத்திருந்தது.

ரிஷப்பந்த் அதிகபட்சமாக 61 ரன்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

ஜடேஜாவும், வாஷிங்டன் சுந்தரும் தற்போது களத்தில் உள்ளனர்.

முதல் இன்னிங்ஸ் ஸ்கோர்

ஆஸ்திரேலியா 181

இந்தியா 185.

□□□□□□□

**டென்னிஸ்**

**ஆக்லாந்தில் நடைபெறும்** யுளுடீ **சர்வதேச** டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் தகுதி சுற்றில் இந்தியாவின் சுமித்நாகல் - நியூலாந்தின் அலெக்சாண்டரை 1-6, 6-3, 6-1 என்ற செட்களில் தோற்கடித்தார்.

சுமித்நாகல் நாளை நடைபெறும் இறுதி தகுதிச்சுற்று ஆட்டத்தில் - பிரான்சின் அட்ரியனை எதிர்கொள்கிறார்.

□□□□□□□

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

□□□□□□□